திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்வதால், என்னுடைய கேள்வி எழுகின்றது. ஆயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் என்றால், இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் இரண்டு உதவித் தலைமை யாசிரியர்களும், மூவாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் மூன்று உதவித் தலைமையாசிரியர்களும் நியமிக்கும் யோசனையையும் அதே நேரத்தில் தமிழ் ஆசிரியர்களை உதவித் தலைமையாசிரியர்களாக ஆக்குகிற யோசனையையும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு உதவித் தலைமையாசிரியர் நியமிக்கின்ற குறிப்புதான் இருக்கிறது. ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு தலைமையாசிரியர் என்ற நிலைமை இப்போது இல்லை. தமிழ் ஆசிரியர்கள் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

Thirukkural

* 35 *Q*.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have any proposal to honour the scholars who have made a deep study of Thirukkural and are devoting their time to propagate the tenets of Thirukkural among the public; and

(*b*) if so, the number of scholars who have been so honoured?

திருக்குறள்

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) திருக்குறளில் தேர்ச்சி பெற்று அதன் பெருமையை நாட்டு மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி வரும் அறிஞர் பெருமக்களை, கௌரவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 7]

திரு. க. அறிவழகன் : நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தமிழாசிரியர்களில் பணி இல்லாதவர்களுக்கெல்லாம் அவர்கள் நம்முடைய தமிழ் இலக்கியங்களில் உள்ள பெருமைகளை எடுத்துச் சொல்லுகிற பணியைத் தரலாம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். பணியில் இல்லாத அப்படிப்பட்ட தமிழ் ஆசிரியர்கள், திருக்குறளையும், அதனுடைய பெருமையையும் எடுத்துச் சொல்வதற்கான பணியிலே அமைக்கப்படுவார்களானால், மக்களுக்கு நன்மை பயக்கும். இப்படிப்பட்ட திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருக்குறளிலே நல்ல புலமை பெற்ற அறிஞர் பெருமக்களை கௌரவிக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தற்போது திருக்குறளில் தேர்ச்சி பெற்று அதை மக்களிடத்திலே பரப்புபவர்களை கௌரவிக்கிற செயற்குறிப்பு இல்லை யென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். திருக்குறளைப் போன்ற பொதுமறையான நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகின்ற அறிஞர் பெருமக்களைச் சிறப்பிப்பதன் மூலம் திருக்குறளின் பெருமை பரவ வாய்ப்பிருப்பதால், தற்போது செயற்குறிப்பு இல்லையெனினும், புதியதாகச் செயற்குறிப்பைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருக்குறளைப் பற்றித் தெரிந்து சொல்லுகிற அறிஞர் பெருமக்கள் நிறைய இருப்பதால், அந்தத் துறையிலே ஊக்கம் தரப்படுகிற வகையிலே இப்படிப்பட்ட நிலைமைகள் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நீதி மன்றங்களில் திருவள்ளுவர் திருவுருவப் படங்களை அரசு ஆணைப்படி வைத்திருக்கிறார்கள். ஆனால் நீதிபதிகள் திருக்குறளில் தேர்ச்சி பெற்றிருக்க ஏதாவது விதிமுறைகள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் திருக்குறளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் அரசுக்கு இருக்கிறது.